**இயக்கவூர்தி விபத்துக்கள் கோருரிமை தீர்ப்பாயம், கோபிசெட்டிபாளையம்**

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 11-ம் நாள் திரு.S.இராமச்சந்திரன், B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதிசெய்யப்படுகிறது.

MCOP.No. 104/2025

**ம.சா. 1**

**திரு. கந்தசாமி**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை ( 3 ம் எதிர்மனுதாரர் தரப்பில்)**

நான் மொபட்டில் பின்னால் அமர்ந்து சென்றேன் என்றால் சரிதான். மொபட்டை லோகநாதன் ஓட்டிசென்றார். மேற்படி லோகநாதனையும் மொபட்டின் காப்பீட்டு நிறுவனத்தையும் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் ஆமாம். மேற்படி மொபட்டிற்கு இன்சூரன்ஸ் இல்லை என்றால் சரிதான். லோகநாதனுக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான். அவசிய தரப்பினரை மனுவில் சேர்க்காததால் மனு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. மேற்படி லோகநாதன் வாகனம் வருவதை சரியாக கவனிக்காமல் திடீரென்று ரோட்டை குறுக்காக கடந்ததால் தான்விபத்து நடந்தது என்றால் சரியல்ல. நாங்கள் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி போய்கொண்டிருந்தோம். விபத்து நடந்த இடத்திற்கு அருகே நான்கு ரோடு சந்திப்பு உள்ளது என்றால் ஆமாம். நான்கு ரோடு சந்திப்பை கவனிக்காமல் சென்றதால் தான் விபத்து நடந்தது என்றால் சரியல்ல. கார் ஓட்டுநரின் கவனக்குறைவினால் விபத்து ஏற்படவில்லை என்றும், மொபட்டை

ஓட்டிய லோகநாதனின் கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனது வயது, மற்றும் வருமானத்தை காண்பிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்தவுடன் ரகுராம் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். அங்கு எவ்வளவு செலவு செய்யப்பட்டது என்றால் ரூ.7 லட்சத்திற்கும் அதிகமாக இருக்கும். ம.சா.ஆ.19 ஆவணத்தில் கண்டுள்ள தொகைகள் மட்டும் தான் மருத்துவமனையில் செலுத்தியுள்ளேன் என்றும், தற்போது தொகையை மிகைப்படுத்தி சொல்கிறேன் என்றால் சரியல்ல. மொபட்டின் உரிமையாளர் மற்றும் ஓட்டுநருக்கு எதிராகத்தான் நஷ்டஈடு கேட்கமுடியும் என்றும், 1 முதல் 3 எதிர்மனுதாரர்களிடமிருந்து கேட்கஇயலாது என்றால்சரியல்ல. கேட்டுள்ள இழப்பீட்டு தொகை அதிகப்படியானது என்றால் சரியல்ல. மனு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.